## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.7/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுன் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோமதி | மதம் | : இந்து |
| க/பெ | : வெங்கடேஷ் | ஜாதி | : -- |
| வயது | : 42 | கிராமம் | : ஏகாம்பரக்குப்பம் |
| தொழில் | : கிராம நிர்வாக அலுவலர் | வட்டம் | : நகரி |

**16.06.2026**
**வா.சா. 2 ன் முதல் விசாரணை**

1. நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். வழக்கு விவரம் தெரிவித்தும் என்னை நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல எனக்கு அதிகாரம் கொடுத்தும் வட்டாட்சியர் அளித்த கடிதம் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் சா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் பெருங்களத்தூர் கிராம நிர்வாக அதிகாரியாக பணி புரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2 ஆவணத்தில் பக்கம் 20ல் இணைக்கப்பட்டுள்ள, நி.முசி.4/1374/2009, ப எண்.635/2009 தேதி .03.2009 என்பது எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்டுள்ளதா என்பதற்கு மேற்படி பதிவு எண்ணிற்கான எங்கள் அலுவலக பதிவேட்டின் அசலை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(பேரேடு நகல் சா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. மேற்படி எண்ணில் எங்கள் அலுவலக ஆவணங்களின்படி லலிதாபாய் என்பவருக்குதான் வாரிசு சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளது. வேதவள்ளி என்பவருக்கு வாரிசு சான்றிதழ் கொடுக்கப்படவில்லை. வா.சா.ஆ 2

ஆவணத்தில் பக்கம் 20ல் இணைக்கப்பட்டுள்ள, நி.முசி.4/1374/2009, ப எண்.635/2009 தேதி .03.2009 என்பது எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்படவில்லை. அது பொய்யான ஆவணம் ஆகும்.

<u>குறுக்கு விசாரணை 1ம் பிரதிவாதி தரப்பில்</u>

1. நான் எத்தனை வருடங்களாக இந்த பணியில் உள்ளேன் என்றால் 14 வருடங்களாக பணி புரிகிறேன். பெருங்களத்தூரில் எத்தனை வருடங்களாக பணியில் உள்ளேன் என்றால் 2 வருடங்களாக உள்ளேன். நான் கொண்டு வந்துள்ள பேரேடு என்ன தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு தலைப்பு இல்லை. அது வாரிசு சான்றிதழ் பதிவேடு ஆகும். அதை C4 என்று பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. சா.சா.ஆ 2ல் C4 பதிவேடு என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. C4 என்பது அந்த வாரிசு சான்றிதழ் பதிவேடை பராமரிக்கும் பணியாளரின் எண் ஆகும். அதை சான்றிதழில் குறிப்பிட மாட்டார்கள்.

2. பதிவேட்டில் உள்ள 7 பகுதிகள் (column) என்ன என்பது பதிவேட்டில் இல்லை என்றால் ஆமாம். தாசில்தாருக்கு வந்த அழைப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வட்டாட்சியரின் அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களைதான் கொண்டு வந்துள்ளேனா என்றால் ஆமாம். வட்டாட்சியரின் குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ள 07.03.2009ம் தேதியிட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த சான்றிதழின் பதிவு எண் குறித்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். 07.03.2009ம் தேதியிட்ட ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதில் குறிப்பிட்டுள்ள பதிவு எண்.635/2009க்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். பதிவு எண்.635/2009ல் 07.03.2009 என்ற தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அது 18.06.2009ம் தேதியிடப்பட்டுள்ளது.

3. வாரிசு சான்றிதழுக்கு முறையான பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் ஆமாம். அதுதான் C4 பதிவேடு ஆகும். பதிவு எண்.635/2009க்கான

கோப்புகளை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஆவணத்தை சமர்பிக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் வழக்கிற்கு ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. வட்டாட்சியரை ஆவணம் சமர்ப்பிக்க கூறியுள்ள நிலையில் நான் தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை 3ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

(மறு விசாரணை இல்லை)